REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மார்கழி 8உ வெள்ளி (23—12—55). ★ ★ வெளியூர்: மார்கழி 9உ சனி (24—12—55) [இதழ் 164

முடி திருத்தும் தொழிலாளர்களின் விபரீதப் போக்கு

அகமதாபாத் டிச. 21—

பஞ்சமகால் மாவட்டத்தில் உள்ள வீர்பூர் நகரத்தில், முடி திருத்தும் தொழிலாளர்கள் எல்லோரும், தாங்கள் நிலையங்கள் வைத்திருந்தால், அங்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கு முடி திருத்த வேண்டியிருக்கும் என்பதற்காக நிலையங்களை மூடிவிட்டு, தங்கள் கைகளில் முடி திருத்துவதற்கான சாமான்களை வழக்கம்போல தோல் பைகளில் தூக்கிக்கொண்டு, தாங்களே வீடுவீடாகச் சென்று

(4-ம் பக்கம் பார்க்க)

திராவிடர்மீது இந்தியைத் திணிக்க புதிய வித்தை

வட நாட்டு பல்கலைக்கழகங்கள் 4-ல் திராவிட மொழி பயில ஏற்பாடாம்

மொழி வழங்கும் பகுதிகளுக்கு இலவசப் பிரயாணமாம்

புதுடில்லி, டிச. 22—

வடக்கிற்கும்—தெற்கிற்கும் 'ஒற்றுமை'யை விரிவாக்குவதற்காக, தென்னிந்திய மொழிகளை வட இந்தியாவில் போதிப்பதற்கு இந்தியப் பேரரசு ஒரு ஏற்பாட்டைச் செய்யத் துணிந்திருக்கிறது.

மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு இயங்கிவரும் டெல்லி, அலிகார், பனாரஸ், விசுவபாரதி முதலிய நான்கு பல்கலைக் கழகங்களிலும் திராவிட—மராத்தி—வங்காளி மொழிகளை வட இந்திய மாணவர்கள் கற்பதற்கு ஏற்பாடு செய்யப்பட இருக்கிறது.

இத்தகவலை, மக்கள் சபைக் கூட்டத்தில், துணை உள்நாட்டு அமைச்சர் பி. என். தத்தார் அறிவித்தார்.

மேற்படி பல்கலைக் கழகங்களில் மேற்குறித்த மொழிகளைப் பயிலும் மாணவர்களுக்கு, பயிற்சியில் ஊக்கம் ஏற்படுவதற்காக ரூ. 500, ரூ. 250 என்று பணப் பரிசுத்திட்டமும் ஏற்படுத்தப்படும். அதுவுமன்றி, மேற்படி மொழி வழங்கும் பகுதிகளுக்கு, அம்மொழி கற்கும் மாணவர்கள் சென்று வருவதற்காக ஆகும் பிரயாணச் செலவையும், வேறு செலவையும் ஈடு செய்வதற்கும், பண உதவி செய்யவும் இந்தியப் பேரரசு முன்வந்திருக்கிறது.

வருங்காலத்தில் வடநாட்டில் உள்ள பல்கலைக் கழகங்கள் பெரும்பாலானவற்றில் தென்னிந்திய மொழிப் பிரிவும், அதுபோன்றே தென்னிந்தியப் பல்கலைக் கழகங்கள் வடஇந்திய மொழிப் பிரிவும் ஏற்படுத்தக்கூடிய நிலை வரக்கூடும் எனவும் தத்தார் அறிவித்திருக்கிறார்.

400 பஸ்களில் 300 பழுதாம்!

சென்னை, டிச. 22—

சென்னை சர்க்கார் போக்குவரத்து இலாகாவில் ஓடிக்கொண்டிருக்கும் 400 பஸ்களில் 300 பஸ்கள் ஓடுவதற்கே இலாயக்கில்லாதவை —ஓட்டை, உடைசல்கள் கொண்டவை; அவற்றிற்குப் பதிலாகப் புதிய வண்டிகள் விடவேண்டும்; அந்த 400-லும் இப்போது ஓடிக்கொண்டிருப்பவை 270 பஸ்கள் தான்,"

என்று, நேற்று நடைபெற்ற போக்குவரத்து இலாகா மாநாட்டில் தெரிவிக்கப்பட்டதாம்!

விமானப் போக்குவரத்தில் பெரும் நஷ்டம்

இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. எட்டு கோடி ஒதுக்கப்படுகிறது

புதுடில்லி, டிச. 21—

இந்தியப் பேரரசு ஏற்று நடத்தும் விமானப் போக்குவரத்து, தொடர்ந்து இரண்டாம் திட்டக் காலத்திலும் பெரும் நஷ்டத்தையே தேடித்தந்துகொண்டிருக்கும் என்று துணிவுடன் எதிர்பார்க்கப்படுகிறதாம்.

விமான 'கார்ப்பரேஷன்'களுக்கென திட்டக் குழுவினர் ஒதுக்கியுள்ள ரூ. 30 கோடியில் நஷ்டங்களைச் சரிக்கட்டுவதற்கென ரூ. 8 கோடி வரை ஒதுக்கிவைத்திருக்கின்றனராம்.

இந்த நிலையில், மேலும் பல புதிய விமானங்கள் வாங்கவும், பழைய விமானங்களைப் புதுப்பிக்கவும் திட்டமிட்டுக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது

17 இலட்சம் பிச்சைக்காரர்கள்

இரயில்வே நிலையங்களில் வளைக்கப்பட்டனர்

புதுடில்லி, டிச. 22—

கடந்த 1955 ஜூன் திங்களுடன் முடிந்த ஓராண்டில், இந்திய இரயில்வே நிலையங்களில் பிரயாணிகளுக்கு இம்சை தந்து வரும் பிச்சைக்காரர்களில் 17 இலட்சம் பேர் வளைக்கப்பட்டனர் என்று தெரியவருகிறது.

இரயில்வே பாதுகாப்புப் படையினரால் வளைக்கப்பட்ட இந்தப் பிச்சைக்காரர்களில் பலர், நிலையங்களைவிட்டுத் துரத்தப்பட்டனர்; பலர், இந்திய இரயில்வேச் சட்டப்படி தண்டிக்கப்பட்டனர் என்று தெரியவருகிறது

19,000 பிச்சைக்காரர்களிடமிருந்து, டிக்கெட்டில்லாமல் பிரயாணம் செய்ததற்காகப் பணம் வசூலிக்கப்பட்டது என்றும், 6,300 பேர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது என்றும் தெரியவருகிறது.

பல்வேறு பிரிவு இரயில்வேக்களிலிருந்தும் கிடைத்துள்ள தகவல்படி, 37,000 பிச்சைக்காரர்கள் கைது செய்யப்பட்டு, 10,000 பேர் வரை சிறைத்தண்டனை பெற்றனர் என்றும் தெரியவருகிறது.

பராகுவேயில் புரட்சி

மராமத்து அமைச்சர் தலைமை ஏற்று நடத்துகிறாராம்!

பியூனஸ்அயர்ஸ், டிச. 22—

தென் அமெரிக்க நாடான பராகுவேயில் புரட்சி ஒன்று பூத்திருப்பதாக உறுதி செய்யப்படாத செய்திகள் கூறுகின்றன.

கொலராடோ கட்சியின் ஒரு பிரிவின் உயர்தர உறுப்பினர் ஒருவரைக் கைது செய்ய ஜனாதிபதி உத்தரவிட்டதின் விளைவாகவே இந்தப் 'புரட்சி' தோன்றியிருக்கிறதாம்.

'புரட்சி'யை பொது மராமத்துத் துறை அமைச்சர் தலைமை ஏற்று நடத்துகிறாராம்.

நேற்று நள்ளிரவிற்குச் சில நிமிடங்களுக்கு முன்பு, 'ரேடியோ டெலிபோன்' தொடர்புகள் துண்டிக்கப்பட்டுவிட்டதாக அர்ஜென்டைனாவின் தபால் - தந்தி இலாகா ஊழியர்கள் தெரிவித்தனராம்.

'விரிக்கும் வலை'யில் விழாமல் தடுக்க முயற்சி

ஆண்டுதோறும் மானியத் தொகை தந்து ஜோர்டானைத் தன் வலைக்குள் இழுத்துக்கொள்ளப் பிரிட்டன் செய்யும் முயற்சியைத் தடுப்பதற்கு எகிப்தும், சவூதி அரேபியாவும் எதிர் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனவாம்!

பிரிட்டன் தரும் மானியத் தொகையை தாங்களிருவரும் தருவதாகத் தூதுவரொருவர் மூலம ஜோர்டானுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

துணை அமைச்சர் மீது பாய்ச்சல்

மராட்டியம் கோரும் காங்கிரசாரை திட்டியது தவறாம்!

பம்பாய் பிரதேசக் காங்கிரசின் விசித்திரப் போக்கு

பம்பாய், டிச. 22—

பம்பாய் மாநில மதுவிலக்குத் துறைத் துணை அமைச்சரான டாக்டர் டி. ஆர். நாராயண் என்பாரைக் காங்கிரசில் இருந்து விலக்குவதெனவும், மாநில சட்ட சபை உறுப்பினர் பதவியை அவர் இராஜினாமாச் செய்யவேண்டும் என்று கோருவதெனவும் பம்பாய் பிரதேசக் காங்கிரஸ் செயற்குழு இன்று முடிவு செய்திருக்கிறதாம்.

அவர் மிக ஒழுங்கீனமாக நடந்துகொண்டதாயும், சம்யுக்த மராட்டியத்தை ஆதரிக்கும் காங்கிரஸ் பரீஷத் என்ற பெயரில் காங்கிரசுக்குப் போட்டி இயக்கம் அமைத்த பொறுப்பற்றச் செயலில் ஈடுபட்டதாயும், எஸ். கே. பட்டீல் தலைமையில் நடைபெற்ற அந்த செயற்குழு

(4-ம் பக்கம் பார்க்க)

பஞ்சாப் சர்க்கார் பணிவு

ஊழலை விசாரிக்க உயர்தரக் குழு நியமிக்கப்படும்

சாந்திகார், டிச. 22—

பக்ரா-நங்கல் அணைக்கட்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் பெரும் அளவுக்குப் பணம் மோசடி செய்யப்பட்டிருப்பதாயும், இலஞ்ச ஊழல் தலைவிரித்தாடுவதாயும் காணப்பட்டதை ஒட்டி, அவற்றை விசாரித்தறிவதற்கு ஒரு உயர்தர அதிகாரமுடைய விசாரணைக் குழுவை நியமிக்க பஞ்சாப் சர்க்கார் உத்தேசித்திருப்பதாகத் தெரியவருகிறது

இந்த முடிவு, மத்திய சர்க்கார் திட்டத்துறை அமைச்சர் குல்சாரிலால் நந்தா, பஞ்சாப் முதன் மந்திரி பீம்சேன் சச்சார், பஞ்சாப் நீர்ப்பாசனத்துறை மந்திரி லெஹ்ரிசிங் ஆகிய மூவரும், கடந்த கிழமையில் டில்லியில் சந்தித்தபோது மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.

இப்படி ஒரு விசாரணைக் குழு அமைக்கவேண்டும் என்று மத்திய சர்க்கார் கோரியதை பஞ்சாப் சர்க்கார் ஏற்க மறுத்ததும், பஞ்சாப் போலீசாரே இந்த விசாரணைக்குப் போதும் என்று அறிவித்ததும் நினைவிலிருக்கலாம்.

இதுவரை செலவு செய்யப்பட்டுள்ள ரூ 100 கோடியில், ரூ. 10 கோடி வரை மோசடி நடந்திருப்பதாக அதிகாரப் பற்றற்ற செய்திகள் வந்ததும் நினைவிருக்கலாம்.

அல்ஜீரியாவில் தேசீய எழுச்சி

அடக்க பிரெஞ்சுத் துருப்புக்கள் விரைகின்றன

52 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர்

அல்ஜியர்ஸ், டிச. 22—

'அல்ஜீரியா, பிரெஞ்சு ஏகாதிபத்தியப் பிடிப்பினின்றும் விலக வேண்டும்' என்ற தேசீய எழுச்சி நாளுக்கு நாள் வளர்ந்த வண்ணமுள்ளது. அந்த எழுச்சியின் விளைவுகளான ஆர்ப்பாட்டங்களை இராணுவ பலத்தைக்கொண்டு அடக்கி ஒடுக்கிவிடுவதில் பிரெஞ்சு ஆதிபத்தியக்காரர்கள் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர்.

கடந்த 24 மணி நேரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது 54 பேர்வரை கொல்லப்பட்டிருக்கின்றனர்.

கொல்லப்பட்டவர்களில் 42 பேர் இராணுவத்தினர் என்றும், 12 பேர் பிரெஞ்சுக்காரர்களை ஆதரிக்கும் முஸ்லிம்கள் என்றும் கூறப்படுகிறது.

இப்போது பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள், வளர்ந்தோங்கியுள்ள தேசீய எழுச்சியை ஒடுக்குவதற்கென மேலும் 1,400 பிரெஞ்சுத் துருப்புகளை பாரிசிலிருந்து இறக்குமதி செய்திருக்கின்றனர் என்றும், அவர்கள், தேசீயவாதிகளை வேட்டையாடுவதில் முழு மூச்சுடன் ஈடுபடுவர் என்றும் தெரியவருகிறது.

கடந்த பதினொரு திங்களாகத் தேசீயவாதிகள் கிளர்ந்தெழுவதும், அவர்களை அடக்குவதற்குத் தேசீய எதிர்ப்பாளர், விரோதிகள் தாக்குதலில் ஈடுபடுவதுமாக இருந்து வருவதின் விளைவாக, அவ்வப்போது பலர் பலியாக்கப்படும் கோரம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இந்தியாவிற்கு எதிராக உலக நீதிமன்றத்தில் வழக்கு

போர்ச்சுகல் தொடுத்திருக்கிறதாம்

இந்தியாவில் போர்ச்சுகலுக்குச் சொந்தமான பகுதிகளான தாரா, நாகர்ஹவேலி பகுதிகளை கடந்த 1954 ஜூலை 21-ந் தேதி முதல் இந்தியா ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாக. ஹேக்கில் உள்ள உலக நீதி மன்றத்தில் போர்ச்சுகல் வழக்குத் தொடுத்திருப்பதாக போர்ச்சுகல் வெளிவிவகார மந்திரி டாக்டர் குன்ஹா பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறாராம்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 23—12—'55 வெள்ளி

புதிய கரடி!

மொழியை அடிப்படையாகக் கொண்டு, இந்தியத் துணைக் கண்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும் என்பது காங்கிரசின் நீண்ட நாள் கொள்கையாக இருந்துவந்திருக்கிறது. அக்கொள்கையைமுன்வைத்து, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பிரித்துவைத்து நிர்வகித்து வந்த மாகாண ஏற்பாடுகளை, காங்கிரஸ் பழித்துக் கூறியும் வந்திருக்கிறது.

மொழி அடிப்படையில் மாகாணங்களைத் திருத்தி அமைப்பதற்குக் காட்டிய காரணங்களிலும், அத்தகு ஏற்பாட்டினால் விளையக்கூடும் எனக் கூறப்பட்ட நலன்களிலும், காங்கிரஸ் கட்சிக்கு உண்மையிலேயே அசைக்க முடியாத நம்பிக்கை இருக்குமானால், வாய்ப்பு நேர்ந்தகாலை அதைச் செயலாற்ற காங்கிரஸ் துளியும் தயங்காது முன்வந்திருக்கவேண்டும். அல்லது மொழிவழி ஏற்பாட்டினால்விளையக்கூடிய நன்மையைக் காட்டிலும் தீமையே அதிகமாகும் எனத் தாம் நம்புவதாக இருந்தால், மொழிவழியில் மாகாணங்களைத் திருத்தி, கண்டிப்பாக அமைக்க முடியாது என்பதையாவது ஐயத்திற்கிடமின்றி திட்டவட்டமாகக் காங்கிரஸ் கூறிவிட வேண்டும்.

ஆனால், காங்கிரஸ் மேலிடமோ, மொழிவழி ஏற்பாடு அறவே கூடாது எனக் கூறத் துணிவில்லாமலும், அதை ஒப்புக்கொள்ளவும் துணிவில்லாமலும், சந்தர்ப்பத்திற்கேற்றவாறும், கோருபவருக்குள்ள செல்வாக்கிற்கேற்றவாறும், ஆம் என்றும்—கூடாது என்றும் சொல்லிக்கொண்டு வருகிறது. அதுபோன்றே, மாகாண புனரமைப்புக் குழுவிற்கிட்ட கட்டளையிலும் நிலைமையைத் தெளிவாகக் கூறாமல் குழப்பியே இருக்கிறது.

மாகாண புனரமைப்புக் குழுவும், இட்ட கட்டளைக்கொப்ப குறிப்பிட்ட ஒரு இனத்தில் மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்தும், மற்றொரு இனத்தில் மொழியை ஒதுக்கித் தள்ளிவிட்டு, குழுவிற்கு மட்டுமே விளங்கக்கூடிய வேறு எதற்கோ முக்கியத்துவம் கொடுத்தும், தனது முடிவை வெளியிட்டிருக்கிறது. அக்குழு முடிவைக் குறித்து, எந்த ஒரு முறையையும் ஒரு முன்மாதிரியாகக்கொண்டு மற்ற பிரச்சினைகளை அணுகி முடிவு கட்டாமல், தம் மனம் போனப் போக்கில் காங்கிரஸ் மேலிடமும் சில இனங்களில் தீர்ப்பளித்துவிட்டிருக்கிறது.

காங்கிரஸ் மேலிடத்தின் தீர்ப்பில் அதிருப்தி ஏற்பட்டால், அது பற்றி நியாயம் கோரி பாதிக்கப்பட்டவர்கள் மேலும் முறையிட்டுக்கொள்ள காங்கிரஸ் மேலிடமே 'நால்வர் குழு' என்ற பெயரில் ஒரு குழுவை நியமித்து இருக்கிறது. காங்கிரஸ் மேலிடம், தம்மில் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்திருப்பவர்களேயாவோம் என்பதை மறந்தே செயல்படுகிறது என்பதைத்தான், இந்த நடைமுறைகள் அனைத்தும் விளக்குகின்றன.

மக்கள் சபையில் கடந்த ஒரு கிழமையாக மாகாண புனரமைப்புக் குழுவின் முடிவு மீதும், காங்கிரஸ் மேலிடத்தின் மறு தீர்ப்பு மீதும் விவாதம் நடைபெற்றுவருகிறது. மொழிவழியில் தாங்கள் விரும்பியதைப் பெற முடியாது ஏமாற்றம் அடைந்துள்ள உறுப்பினர்கள் தங்கள் கருத்தைக் காரசாரமாக எடுத்துக் கூறியும், மொழிவழி ஒழிக்கப்பட்ட ஏற்பாட்டில் தங்களுக்கு நலமிருக்கிறது என நம்பும் உறுப்பினர்கள், முந்தையவர் மொழிகளை மறுத்துக் கூறியும் வருகின்றனர்.

மாகாண புனரமைப்புக் குழுவின் முடிவினால் எந்த வகையிலும் தங்கள் மாகாண நலன்களும் பாதிக்கப்படாதவர்கள், மேற்குறிப்பிட்ட இரு சாரார்களுக்கும் அருமையான 'ஏக இந்தியா' ஏற்பாட்டைக் குறித்து இதோபதேசம்செய்து வருகின்றனர்.

இத்தகைய குழப்பத்திற்கிடையில், இந்தியப் பிரதமர் பண்டித நேருவும், பிரதமர் என்ற முறையில் பேசவில்லை என்று வேலி அமைத்துக் கொண்டு, பெருமையும் புகழும் தனக்கு மட்டுமே அளித்து வரும் உலகக் கண்ணோட்டத்தை வானுக்கு உயர்த்திப் பேசி, உறுப்பினர்களுக்குள்ள உள்நாட்டுக் கவலையை மறக்கடிக்க முயற்சித்திருக்கிறார்.

மொழியா? வளர வேண்டியதுதான்! ஆனால் அதற்கென ஒரு அரசாங்க அமைப்புக் கோருவது கூடாது—கொடுமை! என்கிறார்.

தர்க்கமா? அது எதற்கு? நல்லெண்ணம் இருந்தால், அதுவன்றோ சிலாக்கியம்! என்கிறார்.

ஜனக் கணக்கா? அது எதற்கு—தற்காலத்தில் அது ஒரு நவீன வழக்காகிவிட்டது! எனக் கேலி பேசுகிறார்!

இவ்வளவும் கூறிவிட்டு, பம்பாய்—எனது முடிவுதான் முடிந்த முடிவு என்று கூறுகிறார் பண்டிதர்!

பஞ்சாப் நிலையா—அதுவும் நான் சொன்ன தீர்ப்புத்தான் இறுதியானது என்கிறார், நேரு!

இறுதியாக ஒரு புதிய ஏற்பாட்டையும் கூறியுள்ளார் அந்த அகில உலகக் கண்ணோட்டத்தார்.

அதாவது, இந்தியத் துணைக் கண்டத்தை, நான்கு வட்டாரங்களாகப் பிரித்து, இந்தியப் பேரரசையும் சேர்த்து, ஐந்தாட்சி அமைப்பு ஏற்படுத்த வேண்டுமாம். ஒவ்வொரு நிர்வாகத்துக்கும் ஒவ்வொரு அறிவாளி அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமாம்.

இந்தியப் பேரரசிற்குள்ள அதிகாரமும், இவ்வேற்பாட்டால் குறையாதாம்! மாகாணங்களுக்குள்ள அதிகாரமும் குறையாதாம்!

ஒவ்வொரு ஆட்சி வட்டத்திற்குள்ளும் இணைக்கப்படும் மாகாணங்கள் அனைத்தும் பொதுவாக மேற்கொள்ள வேண்டிய பொருளாதார ஏற்பாடுகளுக்கு, அறிவுரை கூறும் பணியினை, இப்புதிய ஐந்தாட்சி அமைப்பு செய்து வருமாம். எல்லை சிக்கல்களுக்கும் அது பரிகாரம் கூறுமாம்!

துவக்கத்தில் இது! இதுவே பிறகு மாகாணங்களை விழுங்கி விடும் தன்மை பெற்றாலும் பெற்றுவிடும்!

எல்லைச் சிக்கல்களிலும், மொழிவழிகளிலும், கருத்துச் செலுத்தி வருகிறவர்களின் கண்ணையும் கருத்தையும் வேறு பக்கம் திருப்பவே பண்டிதர் இந்த ஐந்தாட்சி அமைப்பு யோசனையைக் கூறியிருக்கிறார் என்றே நாம் நம்புகிறோம். இந்தியாவில், இப்புது அமைப்பு குறித்து விளக்கமாக எதுவும் தெளிவாகத் தெரியாத நிலையில் வேறு எதுவும் நாம் கூறுவதற்கில்லை. இதைப் பண்டிதரின் புதிய கரடி என்றே கூறுகிறோம்.

'நாடற்றவர்கள்' உண்டானதற்கு இந்தியாவே பொறுப்பாகும்'

இலங்கைப் பிரதமர் குற்றம் சாட்டுகிறாராம்!

கொழும்பு, டிச. 21—

"இலங்கையில் 'நாடற்றவர்கள்' என்ற ஒரு பிரிவை உண்டாக்குவதற்கு இந்தியாவே பொறுப்பாகும்,"

என்று இலங்கைப் பிரதமர், நேருவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியா-இலங்கை ஒப்பந்தங்களை அமுல் செய்வதில் இலங்கை மேற்கொள்ளும் முறை தனக்கு அதிருப்தி தந்திருப்பதாக நேரு, ஐந்து திங்களுக்கு முன்னால் கொத்தலாவலைக்கு எழுதியிருந்த கடிதத்திற்குப் பதிலாகவே இந்தக் கடிதம் வரையப்பட்டிருப்பதாயும் அறிய வருகிறது.

இலங்கையில் உள்ள இந்தியக் குடியேற்றக்காரர்கள் பற்றிய தனது கொள்கையை இந்தியா மாற்றிக்கொண்டு வருவதாயும் இலங்கை தெரிவித்திருக்கிறதாம்.

'இலங்கைக் குடியேற்றக்காரர்கள் இந்தியக் குடிஉரிமை பெற்றவர்களாகவே விளங்க வேண்டும் என்று விரும்பினால் அப்படியே இருந்துகொள்ளலாம்' என்று பண்டித நேரு, 1947-ல் கடிதம் எழுதியிருப்பதாயும் கொத்தலாவலை சுட்டிக்காட்டியிருக்கிறாராம்.

பின்னர், இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர், யாரை எல்லாம் இந்தியக் குடிமக்களாகப் பதிவு செய்துகொள்கிறார்களோ அவர்கள் மட்டுமே இந்தியக் குடிஉரிமை பெறமுடியும் என்றும், இதரர்கள் 'நாடற்றவர்கள்' என்றும், அவர்களை இந்தியா ஏற்றுக்கொள்ளாது என்றும் இந்தியா கொள்கையை மாற்றிக்கொண்டதாகவும் கொத்தலாவலை கூறுகிறாராம்.

மேலும், அண்மையில் இந்திய மக்கள் சபையில் பேசிய பண்டிதர், மேலும் ஒருபடி சென்று, 'இலங்கையில் குடியேறியுள்ள இந்தியர்கள் ஒருபோதும் இந்தியக் குடிமக்களாக இருந்ததே இல்லை' என்று குறிப்பிட்டிருக்கிறாரென்றும் கொத்தலாவலை குற்றம் சாட்டியிருக்கிறாராம்.

இலங்கையில் உள்ள இந்தியர்களின் பிரத்தியேகமான சிக்கல் குறித்து கவலை எதும் கொள்ளாமல், அதனைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளாமல் தயாரிக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டம் அமுல் செய்யப்பட்ட பிறகு பல சிக்கல்கள் தோன்றியுள்ளன என்றும், இந்திய சர்க்கார் மேற்கொண்ட தவறான நடவடிக்கைகளால் இலங்கை சர்க்கார் தண்டிக்கப்பட முடியாது என்றும் கொத்தலாவலை முறையிட்டிருக்கிறாராம்.

மேலும், கள்ளத்தனமாகக் குடியேறிவர்கள் என்று இலங்கை நீதிமன்றங்கள் தரும் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதுடன், இலங்கையில் இந்தியத் தூதுவர், அத்தகு கள்ளத்தனமாகக் குடியேறியவர்கள் வெளியேற்றப்படுவதற்கு பிரயாண அனுமதிச் சீட்டுகளைத் தந்து உதவவும் வேண்டும் என்றும் கொத்தலாவலை கூறியிருக்கிறார் எனத் தெரிய வருகிறது.

ஆதாரக் கல்விக்கு

ஆராய்ச்சி நிலையமாம்!

புதுடில்லி, டிச. 21—

ஆதாரக் கல்வி பற்றி ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள தேசிய ஆராய்ச்சி நிலையத்துக்கு ஆண்டிற்கு 15 இலட்சம் நடப்புச் செலவும்; ரூ. 5 இலட்சம் மூலதனச் செலவும் ஆகுமென்று மதிப்பிடப் பட்டிருக்கிறதாம். இந்நிலையத்தில், அகில இந்திய ரீதியில் ஆதாரக் கல்வி சம்பந்தமான எல்லாப் பிரச்சினைகள் பற்றியும் ஆராய்ச்சி வேலைகள் நடத்தப்படுமாம்.

* * *

ஆதாரப் பள்ளிகள் எண்ணிக்கை

இந்தியாவில் 1953—54 இறுதி வரையில் மொத்தம் 35,009 - 'ஜுனியர்' ஆதாரப் பள்ளிகளும், 796 'சீனியர்' ஆதாரப் பள்ளிகளும், 194 ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளும், 6 ஆதாரப் பயிற்சிக் கல்லூரிகளும் இருந்ததாம்.

'ஜுனியர்' ஆதாரப் பள்ளிகளில் 25,06,868 சிறுவர்களும்—5,09,097 சிறுமியரும், 'சீனியர்' ஆதாரப் பள்ளிகளில் 4,56,348 சிறுவர்களும் — 1,01,483 சிறுமிகளும் கல்வி பயின்றனராம்.

எழுத்துக்களில்லை—வார்த்தைகள்தான்!

தனித்தனி எழுத்துக்களாக 'டைப்' அடிப்பது என்றில்லாமல் வார்த்தைகள் அல்லது சிறிய சொற்றொடர்களாகவே 'டைப்' அடிக்கும் ஒரு புதிய இயந்திரத்தை நியூயார்க்கிலுள்ள நிறுவனமொன்று கண்டுபிடித்துள்ளதாம். இதனால், 'டைப்' அடிக்கும் வேகம் 50 சதவிகிதம் அதிகரிக்குமாம்!

வெள்ளச் சேதம்

வடநாட்டுத் தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்ட நஷ்ட விவரம்

இந்தியாவின் வடபகுதியிலும், கீழ்ப் பகுதியிலும் ஏற்பட்ட வெள்ளத்தால், பஞ்சாபில் 403 தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டு, ரூ 21,64,450-ம், டில்லி மாநிலத்தில் 30 தொழிற்சாலைகளுக்கு மொத்தம் ரூ. 5 இலட்சமும், உத்தரப் பிரதேசத்தில் 7 தொழிற்சாலைகளுக்கு மொத்தம் ரூ 1,08,000-ம் நஷ்டமேற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்; மற்ற பகுதிகள் பற்றி தகவல்கள் கிடைக்கவில்லையாம்.

பாதிக்கப்பட்டபகுதிகளுக்கு வெளிநாடுகள் நன்கொடை

இந்தியாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு இலவசமாய் விநியோகம் செய்வதற்காக அமெரிக்கா, பர்மா, இலங்கை ஆகிய நாடுகள் முறையே 20,000 டன், 300 டன், 1,000 டன் தானியங்களை நன்கொடையாகத் தர முன்வந்தனவாம்! அமெரிக்காவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் இன்னும் உணவுத் தானியம் இந்தியாவுக்கு வந்து சேரவில்லையாம்; விரைவில் வந்துவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

அமெரிக்கா மீது குற்றச்சாட்டு?

ஜப்பான் பிரதமர் கூறும் காரணம்

டோக்கியோ, டிச. 22—

"மூன்றாந்தர அல்லது நான்காந்தர வல்லரசாக ஜப்பானை நிலைநிறுத்தி வைத்திருக்க எண்ணுவதே அமெரிக்காவின் கொள்கையாகும். இப்பொழுது நாம் பின்பற்றிவரும் அரசியல் சட்டம், அந்த நோக்கத்துடன்தான் நம்மீது அமெரிக்கரால் திணிக்கப்பட்டது."

என்ற பொருள்படும்படி, மக்கள் சபையில், ஜப்பான் பிரதமர் ஹடயாமா குறிப்பிட்டுள்ளார்

கோவா பற்றிய இந்தியக் கொள்கை

மக்கள் சபையில் நேரு விளக்கம்

"நாம் கொண்டிருக்கிற பரந்த இலட்சியத்தை உள்ளடக்கிய கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதறகாக, நாம் நமது கோபத்தையும், ஆத்திரத்தையும் அடக்கிக் கொண்டிருக்கும் முறைக்கும், நமது சகிப்புத் தன்மை—பொறுமை இவற்றிற்கும் மிகத் தெளிவான எடுத்துக்காட்டுகளாக கோவாவும், காஷ்மீரும் விளங்குகின்றன என்பது, சரித்திரம் எழுதப்படும்போது நிச்சயம் குறிக்கப்படும்,"

என்று, மக்கள் சபையில் பேசிய பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

கோவா, காஷ்மீர் பற்றிய இந்தியப் பேரரசின் கொள்கை, அது கடைப்பிடித்து வரும் சமாதான, காலனி எதிர்ப்புக் கொள்கைக்குப் பொருந்தக் கூடியதாயில்லை—என, சில வெளிநாட்டவர் கூறும் குற்றச்சாட்டிற்குப் பதிலளிக்கும் வகையிலேயே மேற்கண்டவாறு பண்டிதர் குறிப்பிட்டிருக்கிறார்.

விழிப்புடன்தான் இருக்கின்றனர்!

புதுடில்லி, டிச 21—

இந்தியாவில், 1955 அக்டோபருடன் முடிவடைந்த பத்து மாத காலத்தில் சுங்க வரி அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்ட கள்ளக் கடத்தல்களின் மொத்த எண்ணிக்கை 3,905 என்றும், கைப்பற்றப்பட்ட பொருள்களின் மொத்த மதிப்பு சுமார் ரூ 80 இலட்சம் ரூபாய் என்றும் தெரிய வருகிறது.

சென்ற ஆண்டில் இதே கால அளவில் 19,867 கள்ளக் கடத்தல்கள் பிடிக்கப்பட்டதென்றும், அவைகளின் மொத்த மதிப்பு ரூ. 1,59,00,000 என்றும் கூறப்பட்டிருக்கிறது.

"இவ்வாண்டில், 15,972 வழக்குகளில் தீர்ப்பளிக்கப்பட்டன; சென்ற ஆண்டில் 19,825 வழக்குகளில் தீர்ப்பளிக்கப்பட்டன; குறிப்பிட்ட காலத்தில் அபராதங்களாக ரூ. 10·8 இலட்சமும், 'தண்டங்'களாக ரூ. 3 இலட்சமும் விதிக்கப்பட்டன," என்றும் கூறப்பட்டுள்ளது.

'நர்ஸ்' தொழிலில் எம். ஏ. பட்டப் படிப்பு

கல்கத்தா, டிச. 21—

'நர்ஸ்' தொழிலில், எம். ஏ. பட்டப் படிப்பு இந்தியாவில் முதன் முதலாகக் கூடியசீக்கிரம் துவக்கப்படும் — என்று, மேற்கு வங்காள 'நர்சிங் சர்வீஸ்' அதிகாரி திருமதி உமா குப்தா ரோட்டரி சங்கக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

டில்லியிலும், வேலூரிலும் உள்ள கல்லூரிகளில், இத்தொழிலில் இப்போது பி. ஏ. பட்டத்திற்கான வகுப்புகள் இருப்பதாகவும், மேற்கு வங்கத்திலும் இப்படிப்பு ஆரம்பிப்பதற்காகத் திட்டம்பற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாயும் அவர் கூறினாராம்.

சரித்திரத்தை எடுத்துக் காட்டுவது 'ஒற்றுமை'க்கு உலைவைக்குமாம்!

தேவிகுளம் — பீர்மேடு பற்றி பணிக்கர் பேசுகிருர்!

புதுடில்லி—

மாநிலப் புனரமைப்புக் குழுவின் உறுப்பினரான சர்தார் கே. எம். பணிக்கர், ராஜபுத்திரம் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேசும்போது கேரள மாநில அமைப்பு குறித்து குறிப்பிட்டதாவது:—

"கேரள மாநில அமைப்புப் பற்றி பேசும்போது, சிலர் (குழுவின் சிபாரிசை எதிர்ப்பவர்கள்) தென் திருவிதாங்கூரின் சரித்திரத்தையும், மற்றும் சில பிரச்சினைகளையும் எடுத்துக்கூறுவது அர்த்தமற்றதும், இந்தியாவின் ஒற்றுமைக்கு உலை வைப்பதுமாகுமெனக் குழு கருதியது. அதே போன்று, பொருளாதாரத்தில் கேரளம் படுமோசமானதெனக் கூறுவதிலும் அர்த்தமிருப்பதாகக் குழு கருதவில்லை.

"மத்திய சர்க்காரின் பொருளுதவி ஆந்திராவிற்கு கிடைக்கும்போது, ரூ 35 இலட்சம் பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டம் கொண்ட மலபார், திரு-கொச்சியில் சேர்ந்தால் அந்தக் குறையை அகற்றுவதற்கு மத்திய சர்க்கார் முன்வராதா?

"பொருளாதார சுபீட்சத்தைக் குறித்து வாதிடுபவர்களுக்கும், 'தட்சிண ராஜ்ய' அமைப்பை ஆதரிப்பவர்களுக்கும், தேவிகுளம்—பீர்மேடு கேரளத்திலிருந்து பிரிந்து செல்வதில் வருத்தம் உண்டு. ஆனால் வெறும் 'தலை'களை மட்டும் எண்ணிக் கணக்கிட்டு முடிவு காணாமல், பொருளாதார சுபீட்சத்தையும் கருதித்தான், தேவிகுளம்—பீர்மேடு கேரளத்திலிருக்கவேண்டுமென குழு சிபாரிசு செய்தது.

"வேலையில்லாத் திண்டாட்டத்திற்குப் பரிகாரம் காணவும், நிர்மாண அபிவிருத்திக்கும், கேரளம் தனி மாநிலமாக அமைய வேண்டுமென குழு கருதியது"

மதுவிலக்கு தோல்வியுற்றுவிட்டது

பி. டி. இராசன் கருத்து

"மதுவிலக்குச் சட்டத்தை காங்கிரஸ்காரர்கள் கொண்டுவந்தார்கள்; இந்தச் சட்டத்தால், குடிப்பவர்கள் திருந்துவதற்குப் பதிலாகக் குடிக்காரர்கள் அதிகரித்து விட்டார்கள். கிராமங்கள்தோறும் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களும், அவைகளை வாங்கிக் குடிப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துவிட்டது. இவைகளைக் கவனிக்கும்போது காங்கிரஸ்காரர்களாலும், அவர்களின் அரசாங்கத்தாலும் கொண்டுவரப்பட்ட மதுவிலக்குச் சட்டம் தோல்வியடைந்துவிட்டது என்றுதான் சொல்லலாம். வீம்புக்காகத் தாங்கள் 'கொண்டுவந்து விட்டோமே—அதைத் திரும்பப்பெறலாமா' என்று வெட்கப்பட்டுக்கொண்டிருப்பது சரியான காரியமல்ல"

என்று, மதுரையில் நடைபெற்ற லேவாதேவிக்காரர் மாநாட்டில் பி. டி. இராசன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

நெல்லை மாவட்ட தி.மு. கழகத் தோழர்களுக்கு

"தி.மு. கழகத்தில் உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்காக வேண்டி யாரோ சிலர், வெறும் தாளில் கையெழுத்து வாங்கி பணம் வாங்குவதாக இங்கு புகார் வந்துள்ளது.

"இவ்விதம் யாரேனும் உறுப்பினராகச் சேர்ப்பதாகச் சொன்னால், கையெழுத்திட்டுப் பணம்கொடுத்து ஏமாற வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

"தி. மு. கழகத் தலைமை நிலையத்திலிருந்து உறுப்பினர் சேர்க்கும் அச்சுத் தாள் பெற்று, அதில் மாவட்டக் கழக முத்திரையுடன் ஒவ்வொரு கிளைகளுக்கும் அனுப்பியுள்ளேன். உறுப்பினராகச் சேர விரும்பும் தோழர்களும், பொதுமக்களும் கிளைக் கழகங்களிடம் கட்டணம் செலுத்தித் தங்களை உறுப்பினர்களாகப் பதிவுசெய்துகொள்ள வேண்டுகிறேன்.

"கிளைகள் இல்லாத ஊர்களில் உள்ள தோழர்கள் 25 பேர்களைச் சேர்த்துக் கழகம் அமைத்துக்கொண்டு, உறுப்பினர் சேர்க்கும் விண்ணப்பத் தாளுக்கு எழுதினால் உடனே அனுப்பி வைக்கிறேன். விதிமுறைகள் தலைமைக் கழக அறிக்கைப்படியாகும்"

என்று, நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் கே. வி. கே. சாமி அவர்கள் அறிவிக்கிருர்.

'நான் காங்கிரஸ் உறுப்பினரல்ல'

சினிமா நடிகர் என். எஸ். நாராயணன் அறிவிப்பு

"ஈரோடு நகர சபைத் தேர்தலில், என்னைக் காங்கிரசின் சார்பாக நிறுத்தப்பட்டதால் 'நான் ஒரு காங்கிரஸ் அங்கத்தினர்' என்று தமிழகமெங்கும் எண்ணத்தக்க நிலை ஏற்பட்டுவிட்டது. ஆதலால், சிறு ஊர்களிலிருந்து காங்கிரஸ் கூட்டத்திற்குப் பேச வருமாறு அழைப்புகளும், பல ஊர்களிலுள்ள பழைய அன்பர்களின் கண்டனக் கடிதங்களும் எனக்கு வந்து கொண்டிருப்பதோடு, கேள்விகளும் கேட்கப்படுகின்றன.

"நடிகன் என்ற முறையிலும், ஈரோடு நகர சபையில் அங்கம் வகித்து பொது சேவையில் ஈடுபட்டவன் என்ற முறையிலும், நாட்டு மக்களுக்கு உண்மையை உணர்த்துவது எனது கடமை என உணர்கிறேன்.

"26—8—55ல், தேர்தலுக்காக விண்ணப்பப் பத்திரம் தாக்கல் செய்வதற்கு முன்னால் நான் எந்தக்கட்சியிலும் அங்கம் வகிக்கவில்லை; அநுதாபியாக இருந்ததுண்டு; இன்றும் அதே நிலையில் தான் இருக்கிறேன்; எந்தக் கட்சியிலும் உறுப்பினன் அல்ல.

"என்னைத் தேர்தலில் நிற்க வைத்த ஈரோடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் எம். ஏ. ஈஸ்வரன் அவர்கள், அங்கத்தினன் ஆகவேண்டுமென்று என்னை வலியுறுத்தவுமில்லை; நான் காங்கிரஸ் உறுப்பினன் ஆகவுமில்லை.

"ஆகவே, நான் இன்றுவரையில் எந்தக் கட்சியிலும் அங்கத்தினன் அல்ல என்று பொது மக்களுக்கும், அன்பர்களுக்கும் அறிவித்துக் கொள்கிறேன்."

சென்னைக்கு ரூ. $4\frac{1}{2}$ இலட்சம்

வியட்நாம் வணிகரின் அன்பளிப்பு

மருத்துவமனை, பள்ளிக்கூடம் கட்ட வழங்கினர்

சைகோன், டிச. 21—

வியட்நாமைச் சேர்ந்த பெரிய தமிழ்நாட்டு வணிகரான அப்துல் அஜீஸ் என்பார், தனது சொந்த நகரமான சென்னையில் ஒரு மருத்துவமனையும், பள்ளியும் கட்டுவதற்கென ரூ 4,50,000 கொடுக்க முன்வந்திருப்பதை இந்தியப் பேரரசு ஏற்றுக் கொண்டிருப்பதாக இங்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது

100 படுக்கைகள் வரை கொண்டதாக அந்த மருத்துவமனை இருக்கும். அதற்கும், ஆரம்பப் பள்ளிக்குமான கட்டிட வேலைகள் இன்னும் 6 மாதங்களுக்குள் துவங்கலாம் என்று தெரியவருகிறது.

52 வயதான அஜீஸ், வர்த்தகத் தொழிலிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டு தாயகம் திரும்பிக்கொண்டிருக்கிருர்.

14 வயதில் ஒரு தெரு வியாபாரியாகத் தொழிலைத் துவங்கிய அவர் பின்னர் படிப்படியாக உயர்ந்து, இந்தோ-சீனாவிலேயே பல கிளைகளைக் கொண்ட பெரிய கடைகளை நடத்தி வந்திருக்கிருர்.

ஆண்டுதோறும், இந்திய, பிரெஞ்சு, வியட்நாம் அறநிலையங்கள் பலவற்றிற்கு 10,000 பவுன் வரை அன்பளிப்புத் தந்திருக்கிருர்.

அஜீஸ் அவர்கள், இரண்டாம் உலகப் பெரும்போரின்போது ஒரு ஜப்பானியக் கைதிகள் முகாமில் பல மாதங்கள் வரை காலங்கழித்திருக்கிருராம்.

தேவிகுளம், பீர்மேடு தமிழ்ப் பகுதிகளே

மலையாள கம்யூனிஸ்டு மக்கள் சபை உறுப்பினர் ஒப்பம்

புதுடில்லி, டிச. 19—

"மொழிவழி மாநில அமைப்பை நான் வரவேற்கிறேன்.

"மலையாளிகள் வெகுவாரியாக உள்ள கூடலூர் கேரளத்துடன் இணையவேண்டும்.

"திரு-கொச்சியில் உள்ள தமிழ் வட்டங்கள் சென்னையுடன் இணைக்கப்படவேண்டும்

"தேவிகுளம், பீர்மேடு விஷயத்தில், கேரளத்தின் பொருளாதாரத் தேவைகளுக்கே முதலிடம் தரவேண்டும். இவை தமிழ்ப் பகுதிகள்தான்; என்றாலும், இந்தப் பகுதியிலிருந்து நீர் வசதி பெறுவது பற்றிய மலையாளிகள் கோரிக்கையையும் கவனித்தாகவேண்டும்"

என்று, கேரளத்தைச் சேர்ந்த கம்யூனிஸ்டு உறுப்பினரான பி. டி. பொன்னூஸ் மக்கள் சபையில் மாநிலக் குழு விவாதத்தின்போது குறிப்பிட்டிருக்கிருர்.

மலாயா பல்கலைக் கழகத்திற்கு அன்புக் காணிக்கை

ஐயாயிரம் தமிழ் நூற்களை சென்னை அரசாங்கம் வழங்கியது

சென்னை, டிச. 21—

மலாயா பல்கலைக் கழகத்திற்கு, 5245 தமிழ் நூற்களை, தனது நல்லெண்ணத் திற்கறிகுறியாக சென்னை அரசாங்கம் வழங்கியுள்ளது. அப்பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆய்வுக்காக இடமளிக்கப் பட்டிருக்கிறது.

தமிழ் மொழியை ஒரு ஆட்சி மொழியாக மலாயா அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

புயலால் பாதிக்கப்பட்டோருக்குக் கைத்தறி ஆடைகள்

கட்டிமேட்டில் மு. கருணாநிதி வழங்கினர்

19—12—55 இரவு 7 மணிக்கு தோழர்கள் மு. கருணாநிதி, முல்லை-சத்தி, திருவாரூர் தென்னன் ஆகியோர் கட்டிமேடு வந்து கழகத் தோழர்களுடன் புயலால் பாதிக்கப்பட்டவர்களைப் பார்வையிட்டு 200-க்கு மேற்பட்ட ஆதிதிராவிட மக்களுக்கும், நடுத்தர குடும்பத்தவர்களுக்கும் கைத்தறி ஆடைகள் வழங்கினர். மக்களனைவரும் மகிழ்ச்சியடைந்தனர்.

பல இலட்சம் ரூபாய் பாழ்?

பழைய மண்டபத்திற்கே சென்னை சட்ட சபை திரும்புகிறது!

சென்னை, டிச. 21—

மாநில புது அமைப்பிற்குப் பிறகு, சென்னை சட்டசபைக் கூட்டங்கள், தற்போது சர்க்கார் எஸ்டேட்டில் பல இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தில் நடைபெறுது என்றும், சென்னை கோட்டையில் உள்ள சட்டசபை மண்டபத்திலேயே நடைபெறக்கூடும் என்றும் முதன் மந்திரி காமராசர் தெரிவித்திருக்கிருர்.

அப்போழுது சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்துவிடும் என்றும், கோட்டையில் உள்ள மண்டபமே போதுமானது என்றும், அவசியமானல் இந்த மண்டபத்தையே திருத்தி அமைத்துக்கொள்ளலாம் என்றும் அவர் கூறினாராம்.

பல இலட்சம் ரூபாய் செலவில் அமைத்த புதிய மண்டபம் என்ன ஆவது என்பதைக் குறித்து காமராசர் எதுவும் கூறவில்லை.

'ஆண்டுதோறும் சில சமயங்களில், உதகமண்டலம் அல்லது குற்றாலத்தில் சட்டசபைக் கூட்டங்களை நடத்துவது பற்றிய யோசனைகள் எதையும் சர்க்கார் பரிசீலிக்கவில்லை' என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

இந்திய சர்க்கார் வழங்கும் சகல வசதிகளுடனும், சலுகைகளுடனும் 18 வெளிநாடுகளைச் சேர்ந்த 85 மாணவர்கள் இந்தி மொழிக் கல்வி பெற்றுவருகின்றனர்.

ரஷ்ய முயற்சி தோல்வி

ஐ நா. சபையில் வெளி மங்கோலியாவைச் சேர்ப்பதற்கு ரஷ்யா கொண்டுவந்த தீர்மானத்தை ஐ நா பாதுகாப்புச் சபை நிராகரித்துள்ளது ரஷ்யா ஒன்றைத் தவிர, மற்ற எல்லா நாடுகளும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லையாம்.

'சித்தூர், பாலக்காடு வட்டத்தில் தொழிற்சாலை துவங்குக'

பண்டித நேரு முன் ஆர்ப்பாட்டம்

"பாலக்காடு, சித்தூர் (கொச்சி) தாலுகாக்களில் இரண்டாம் திட்டத்தின்கீழ், உடனடியாக ஏதேனும் தொழில்கள் துவங்கினால் தான் இங்கு நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியும் என்பதை வற்புறுத்துவதற்காக, பிரதமர் நேரு மேற்கொள்ளும் மூன்று நாள் கேரள சுற்றுப்பயணத்திற்காகப் பாலக்காடு வரும்போது அவர் முன்புகூடி, அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று சித்தூர், பாலக்காடு வட்டங்களின் சோஷலிஸ்டுக் கட்சிக் கிளைகளின் கூட்டுக் கூட்டம் கொழிஞ்சாம்பாறையில் நடந்த 18-ந் தேதி நடைபெற்றபோது முடிவு செய்திருப்பதாக செயலாளர் அறிவித்திருக்கிருர்.

(4-ம் பக்கம் பார்க்க)

ஒண்டிப்புதூர்

17—12—55-ல்கோவை தாசில்தாரிடம் ஒண்டிப்புதூர் தி. மு. கழகச் சார்பில், புயலால் பாதிக்கப்பட்டோருக்கு 2 மூட்டை அரிசியும், 54 படி சோளமும், கைத்தறி புடவையும் அளிக்கப்பட்டது.

19—12—55-ல், கோவை கலெக்டரிடம் ரூ. 75 ஒப்படைக்கப்பட்டது.

சின்னாளப்பட்டி

தி. மு. க., தி. க. தோழர்கள், பஞ்சாயத்துப் போர்டு தலைவர், ஊர்ப் பெரியவர்கள் ஆகியோர் கூட்டு முயற்சியில் 62 துணி உருப்படிகளும், 25 சேர் அரிசியும் திரட்டி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திருச்சினம்பூண்டி

தி. மு. கழகத் தோழர்களும், பொது மக்களும் சேர்ந்து 4½ மூட்டை அரிசியும், 18 மனு கேழ்வரகு மாவும், 100-க்கு மேற்பட்ட பழைய துணி உருப்படிகளும் வசூலித்து ரெவினியூ அதிகாரியிடம் கொடுக்கப்பட்டது.

திரு-தமிழக இணைப்பு

பட்டத்தின் 'பகீரத முயற்சி'!

டில்லி மந்திரியுடன் தனிப்பட்ட பேச்சு?

திருவனந்தபுரம்—

திரு-கொச்சியிலுள்ள தென் தாலுகாக்கள், சென்னை மாநிலத்துடன் இணைக்கப்படுவதை எதிர்த்து பட்டம் தாணுப்பிள்ளை புதுடில்லியில் 'பகீரத முயற்சி' செய்து வருவதாகவும், காங்கிரஸ் மேலிடத்தார் அனுதாபத்துடன் இருந்து வருவதாகவும் சில மலையாளப் பத்திரிகைகளில் தினசரி செய்தி பிரசுரமாகிவருகிறது.

டில்லியில் மத்திய சர்க்கார் மந்திரியொருவருக்கும், பட்டத்திற்கும் இதுபற்றி தனிப்பட்ட பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுள்ளதாம்.

‘சம்யுக்த மராட்டியம் வேண்டும்’

பம்பாய் நகர சபை தீர்மானம்

காங்கிரஸ் மூக்கறுப்பு

பம்பாய், டிச. 22—

பம்பாய் நகரைத் தலைநகராகக் கொண்ட சம்யுக்த மாராட்டியம் அமைக்கவேண்டும் என்ற கோரிக்கைக்கு நாளுக்கு நாள் ஆதரவு வளர்ந்து வருகிறது என்பதற்கு, கோரிக்கைக்கு ஆதரவான தீர்மானத்தை பம்பாய் நகர சபை மேற்கொண்டிருப்பதும் ஒரு சான்றாகும்.

ம சோ. கட்சி உறுப்பினர்கள் கொண்டுவந்த ‘பம்பாயைத் தலைநகராகக் கொண்ட சம்யுக்த மராட்டியம், மகா குஜராத் என்ற இரு மாநிலங்கள் அமைக்கவேண்டும்’ என்ற தீர்மானம், பெருத்த சலசலப்பிற்குப் பின் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் மேலிடம் கூறியபடி, ‘பம்பாயைத் தனி மாநிலமாக்கி விட்டு, மராட்டியம், குஜராத் என்ற மாநிலங்களும் அமைப்பது’ என்கிற திருத்தம் ஒன்றை நகர சபையில் உள்ள காங்கிரசார் கொண்டுவந்து தோல்வி கண்டனர்; திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

காங்கிரஸ் கொண்டுவந்த திருத்தத்திற்கு ஆதரவே இல்லை; வாக்கெடுப்பின்போது, சபைக் கூட்டத்திற்கு வராதிருந்த மூவர்களைத் தவிர 63 பேர் திருத்தத்திற்கு எதிராக வாக்களித்தனர்.

ம.சோ.-க்களின் சம்யுக்த மராட்டியத் தீர்மானம் 63 வாக்குகள் பெற்று நிறைவேறிவிட்டிருக்கிறது

காங்கிரஸ் கட்சித் தீர்மானத்திற்கு எதிராக 21 காங்கிரசார் வாக்களித்திருக்கின்றனர்.

தீர்மானம் நிறைவேறுமுன்பாக, காங்கிரஸ் திருத்தத்தை ஆதரிக்கும் 47 உறுப்பினர்கள் வெளியேறிவிட்டனர்.

மொத்தம் 124 இடம் கொண்ட பம்பாய் நகரசபையில் ஒரு இடம் காலியாயிருக்கிறது; இப்போது 123 பேர்களில் 114 உறுப்பினர்கள் இன்றையக்கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

பம்பாயின் எதிர்காலம் பற்றிய சிக்கல் எழாதிருந்தபோது, காங்கிரஸ் கட்சிக்குத்தான் பெருவாரியான இடங்கள்—அதாவது, 62; அவர்களுக்கு, முன்னாள் முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த 11 பேர்களின் ஆதரவும் கிடைத்து வந்தது.

ம. சோ. கட்சியினரும், இதர இடதுசாரிகளுமாக 35 பேர் உள்ளனர்.

முடி திருத்தும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாங்கள் விரும்புபவர்களுக்கு மட்டும் வேலை செய்வது என்று முடிவெடுத்திருக்கிறார்களாம்.

தீண்டாமையைக் கடைப்பிடிப்பதற்கு எதிராக உருவாக்கப்பட்டிருக்கும் சட்டத்தை எதிர்த்தே இந்தத் தொழிலாளர்கள், இந்த முடிவை மேற்கொண்டிருக்கின்றனராம்!

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவருக்கும், ஒரு ஆசிரியருக்கும் முடி திருத்த மறுத்தக் காரணத்திற்காக, முடி திருத்தும் நிலையம் ஒன்றின் சொந்தக்காரரைப் போலீசார் கைது செய்திருப்பதுடன், அவர் மீது வழக்கும் தொடர்ந்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

‘மத்திய சர்க்காருக்கு அதிகாரம் கிடையாது’

ஆமதாபாத் மன்றத் தீர்ப்பு

‘சுத்தமான நெய்யின் மணம் அல்லது நிறம் உள்ள வனஸ்பதி தயாரிக்கக் கூடாதெனத் தாவர எண்ணெய்ப் பண்டங்கள் கட்டுப்பாடு அதிகாரி பிறப்பித்த அறிவிப்பு செல்லத்தக்கது அல்ல,’ என்று, ஆமதாபாத் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் எல். என். பாட் தீர்ப்பு அளித்துள்ளார்.

1956-ம் ஆண்டு அத்தியாவசிய விநியோக (தற்காலிக) அதிகாரங்கள் சட்டத்தின் 3-வது பிரிவுப்படி, தாவர எண்ணெய்ப் பண்டங்களின் தரத்தைக் கட்டுப்படுத்த மத்திய சர்க்காருக்கு அதிகாரம் ஏதும் கிடையாது என்பது, மாஜிஸ்திரேட் தீர்ப்பாகும்.

கட்டுப்பாடு அதிகாரியின் அறிவிப்பை மீறியதாக 5 வியாபாரிகள் மீது தொடரப்பட்டிருந்த வழக்கில், அவர்களை மாஜிஸ்திரேட் விடுதலை செய்தார்.

மறுமலர்ச்சி நூல் நிலைய நான்காவது ஆண்டு விழா

25—12—55 மாலை 5 மணிக்கு, திருவனந்தபுரம்-சாலை, கொத்தவால் தெருவில், தோழர் சு. வன்னியப் பெருமான் தலைமையில் நடைபெறும். தோழியர் அருண்மொழி சொற்பொழிவாற்றுவார்.

175 தொழிலாளர்கள் குடும்பங்கள் பட்டினி

கதவடைப்பை எதிர்த்துப் போராட்டம்

காங்கிரசின் ‘மாதிரி சோஷலிச’க் கொள்கையின் இலட்சணம்

சென்னை, டிச. 23—

சென்னை தண்டையார்பேட்டையிலுள்ள ‘மைசூர் பிரீமியர் மெட்டல் பாக்டரி அண்ட் இந்துஸ்தான் ரோலிங் மில்’ நிர்வாகத்தினர், சென்ற செப்டம்பர் திங்கள் 19-ந் தேதியன்று, எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் சட்டத்திற்கு விரோதமாகக் கதவடைப்புச் செய்து 175 தொழிலாளர்களைப் பழிவாங்கினர்.

இதுபற்றி அந்த ஆலைத் தொழிலாளர்கள், கடந்த 3 மாத காலமாகச் சர்க்காருக்குத் தங்களது குறைகளை எடுத்துக் கூறியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. குறைந்தபட்சம், சர்க்கார், இந்தத் தகராறை மத்தியஸ்தக் கோர்ட்டுக்கு அனுப்பித் தீர்த்துவைக்கவோ, அல்லது சட்டப்படி தொழிலாளருக்குச் சேரவேண்டிய நஷ்டயீடு, கூலி பாக்கியையாயினும் வாங்கித் தரவோ முன்வந்திருக்கலாம்.

இந்நடவடிக்கைகளைக்கூட சர்க்கார் மேற்கொள்ள முன்வராததால், ஆலை நிர்வாகத்தினரின் அநியாயப் போக்கினைக் கண்டித்து, வருகிற 27-ந் தேதி முதல் ஆலைத் தொழிலாளர் சங்கத்தவர் சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட இருக்கின்றனர்.

27-ந் தேதியன்று ஆலை தலைமைக் காரியாலயத்தின் முன்னர் மறியலும், மறுநாள் காலை முதல் உண்ணாவிரதமும் மேற்கொள்ள இருக்கின்றனர்.

இந்தத் தகவலை, மேற்படி ஆலைத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் எஸ் முத்துகிருஷ்ணன், தாம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

புயல் நிவாரண நிதியளிப்புக் கூட்டம்

24-12-55 மாலை 5 மணிக்கு, மணமேடு மைதானத்தில், மணமேடு புயல் நிவாரணக் கமிட்டிச் சார்பில் நடைபெறும். தோழர்கள் வி. ஏ. முத்தையா, அம்பில் தர்மலிங்கம் ஆகியோர் பேசுவர்.

சித்தூர், பாலக்காடு......

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

‘இந்த இரண்டு வட்டத்திலும் வாழும் தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்து நிர்ணயம் செய்வதற்கு ஒரு வாக்கெடுப்பு நடத்த வேண்டும்’ என்றும் அவர்கள் நேருவிடம் கோருவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பன்னிரண்டு தீவிர ஊழியர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவார்கள் என்றும் தெரியவருகிறது.

நில உடைமை வரம்பு

சென்னை சர்க்கார் நிலை பற்றி முதலமைச்சர் தகவல்

சென்னை, டிச. 21—

“சென்னை சர்க்கார் உத்தேசித்துள்ள நிலச் சீர்திருத்தத்தின் மூன்றாவது கட்டமான நில உடைமை வரம்புப் பிரச்சினை, இப்போது பிரசுரமாகியுள்ள ‘நியாய வார மசோதா’ சட்டமான பின்பு முடிவு செய்யப்படும்,”

என்று, முதலமைச்சர் காமராசர் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் மந்திரிசபையில் மாறுதல்

பிரிட்டிஷ் மந்திரி சபையில மிக முக்கியமான மாறுதலகள் நிகழ்ந்திருக்கின்றன.

வெளிவிவகார இலாகா மந்திரியாயிருந்துவந்த ஹெரால்டு மாகமிலன் நிதி மந்திரியாகி யிருக்கிறார்.

வெளி விவகார இலாக்காவின் புதிய மந்திரியாக செல்வின்லாயட் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்தி மொழிக் குழுவினர் சென்னை வருகின்றனர்

சென்னை, டிச. 23—

இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள ஆட்சி மொழிக் குழுவினர் சென்னையில் 1956-ம் ஆண்டு ஜனவரி 9-ந் தேதி முதல் 12-ம் தேதிவரைத் தங்கி, இந்தி அரசியல் மொழி ஆவது பற்றிப் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் கருத்தையும், தனிப்பட்ட சங்கங்களின் கருத்தையும் கேட்டுப் பதிவு செய்துகொள்வார்கள்.

துணை அமைச்சர்மீது..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் டாக்டர் நாராயண் மீது குற்றம் சாட்டப்பட்டது.

அமைச்சர் எதிர்ப்பு

அகில இந்தியக் காங்கிரசையோ, அல்லது காங்கிரஸ் செயற்குழுவினுடையவோ முடிவு எதையும் தான் மீறவில்லை என்றும், பம்பாய் பிரதேசக் காங்கிரஸ் செயற்குழுவின் முடிவு தனக்கு இன்னும் கிடைக்கவில்லை என்றும், எதிராளிக்கு, தனது வழக்கை எடுத்துரைக்க வாய்ப்பே தராமல், எதேச்சாதிகாரமாக முடிவெடுப்பது விசித்திரமானதாகும் என்றும் அந்தத் துணை மந்திரி பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

தற்போது பிரிட்டனையே நம்பியிருக்கிறார்களாம்!

புதுடில்லி, டிச. 23—

‘இராணுவச் சமான்களுக்காகத் தற்போது பிரிட்டனையே இந்தியா முக்கியமாக நம்பியிருக்கிறது’ என்று மக்கள் சபையில, பாதுகாப்புத் துணை அமைச்சர் அறிவித்தாராம்.

கீழை நாட்டு மொழிகள் மாநாடு

திராவிடக் கலாச்சார, தமிழ்மொழி ஆய்வரங்கில் பலமொழி நிபுணர்கள் பங்கேற்பர்

சிதம்பரத்தில் டாக்டர் இராதாகிருஷ்ணன் தலைமையில் 500 பிரதிநிதிகள் கலந்துகொள்வர்

சிதம்பரம், டிச. 23—

கீழைநாட்டு மொழிகள் மாநாடு டிச 26-ந் தேதியன்று இங்கு துவங்கும்; மாநாட்டிற்கு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் எஸ் இராதாகிருஷ்ணன் தலைமை தாங்குவார்.

இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் சுமார் 500 பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது

மாநாட்டில் 14 வகை மொழிப் பண்பாடுகள் குறித்து விவாதிக்கப்படும்.

திராவிடக் கலாச்சாரம் பற்றியும். தமிழ் மொழி பற்றியும் நடைபெறும் ஆராய்ச்சியுரைகள் மாநாட்டில முக்கிய இடம பெறும்

ஒவ்வொரு மொழி பற்றியும் ஏராளமான ஆராய்ச்சியுரைகள் மாநாட்டு அமைப்பாளருக்கு வந்து சேர்ந்துள்ளன.

பேராசிரியர் ஆர் பி சேதுப்பிள்ளை தலைமையில் நடைபெறும் திராவிடக் கலாச்சாரப் பகுதியில், பல மொழி நிபுணர்கள் மாநாட்டில் பங்கு பெறுவார்கள்; வடமொழி மேதைகளும் இம்மாநாட்டில கலந்துகொள்வார்கள்.

பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரைத் தலைவராகக் கொண்ட ‘தமிழ் மொழி ஆய்வரங்’கில் ஏராளமான தமிழ் அறிஞர்கள் பங்கு பெற முன்வந்துள்ளனர்.

மாநாட்டில இசையரசு எம் எம். தண்டபாணி தேசிகரின் இன்னிசை விருந்து நடைபெறும்.

நடனக் கலை நிகழ்ச்சியொன்றும் மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் இடம் பெறும்

கழகக் கூட்டம்

★

பெங்களூர்

பிளாக்பள்ளி கழகக் கட்டிட எதிரில்

25—12—55 மாலை 5 மணிக்கு

தலைவர்: ஜி. எப். லூயிஸ்

பேசுவோர்:

என். வி. நடராசன்

ஜே. கனகசுந்தரம்

கி. சோழன்

பொதுக்கூட்டம்

24—12—55 மாலை 5-30 மணிக்கு, சென்னை-காசிமேடு, ஆல்பர்ட் ஜேசுதாஸ் மைதானத்தில சென்னை - தண்டையார்பேட்டை ரோலிங் மில்லை 3 மாதமாகக் கதவடைப்பு செய்துள்ளதைக் கண்டித்து, தோழர் எஸ். கிருஷ்ணமூர்த்தி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும் தோழர்கள் என். வி. நடராசன், காஞ்சி கல்யாணசுந்தரம், முகவை ஆர். எஸ். பாண்டியன், கே. டி. கே. தங்கமணி, கே. ரமணி, ஏ. எஸ். கே. ஐயங்கார், டி எஸ். இராமானுசம், பி. தங்கராஜ், பாண்ஸ் பரமானந்தம், கே. கணேசன், மற்றும் பலர் பேசுவர்.

பெங்களூரில்

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன்

25—12—55 ஞாயிறு காலை 7 மணிக்கு: கண்டோன்மெண்ட் இரயில் நிலையத்தில் வரவேற்பு.

காலை 9 மணிக்கு: கண்டோன்மெண்ட் பாரத பவனில் கழக உறுப்பினர்கள் கூட்டம்.

மாலை 5½ மணிக்கு: பிளாக்பள்ளி கழகக் கட்டிட எதிரில் பொதுக்கூட்டம்.

இலக்கிய ஆராய்ச்சி வகுப்பு

சென்னை மாணவர் மன்றச் சார்பில், 25—12—55 மாலை 3 மணிக்கு இலக்கிய ஆராய்ச்சி வகுப்பு சென்னை—ஆயலூர் முத்தையா முதலித் தெரு, 34 ம எண்ணுள்ள இல்ல மேல்மாடியில், திரு. என். சங்கரன் அவர்கள் தலைமையில் நடைபெறும். மயிலை சிவமுத்து, வல்லை பாலசுப்பிரமணியம் ஜி செல்வரங்கம ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

மதுரை கல்லக்குடி நடராசன் நினைவுப் படிப்பக 2-வது ஆண்டு விழா

22—12—55 மாலை 6 மணிக்கு, மேற்படி படிப்பகத்திற்குமுன்பாக (மதுரை—31-வது வட்டாரம் சிந்தாமணி ரோடு) தோழர் அ குருசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் எஸ். முத்து, சிற்றுளி அ. சுப்பிரமணியம், பி. கே. சேதுராமன், கே. எஸ். சந்தானம், என். எஸ். இராசா, கே. பி. பாண்டியன் ஆகியோர் பேசுவர்.

மறைமலை அடிகள் நாடக மன்றம் நூல் நிலைய 4-வது ஆண்டு விழா

25—12—55 மாலை 5-30 மணிக்கு: மேற்படி மன்றக் கட்டிடத்தில், (சென்னை-இராயபுரம், எண் 40, மன்னார்சாமி கோவில் தெரு) தோழர் ஓ. இரா கிருட்டிணசாமி தலைமையில் நடைபெறும் தோழர்கள் க. அன்பழகன, இராம சுப்பிரமணியம், வே. கபிலன், ஏ கே வில்வம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை மாவட்ட தி. மு. கழகக் கிளைச் செயலாளர்கட்கு

★

“25-12-55 காலை 10 மணிக்கு ‘அறிவகத்’தில் கூடி, புயல் நிவாரண நிதி பற்றியும், திராவிடர் திருநாளை நடத்த வேண்டிய முறை பற்றியும் பேசவேண்டியிருப்பதால், அனைவரும் வரும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்,”

என்று, சென்னை மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

சென்னை 40-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

25—12—55 காலை 9-30 மணிக்கு. சென்னை-சேப்பாக்கம், எண் 39, லால் பேகம் தெருவில், சென்னை 40-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, திராவிடர் திருநாள், மற்றும் பல பிரச்சினைகள் பற்றி ஆலோசிக்கப்படும்.

விருதுநகர் தி. மு. கழக உறுப்பினர்கட்கு

25—12—55 காலை 10-30 மணிக்கு, விருதுநகர் தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம், நாடார் பரிபாலன சங்கக் கட்டிடத்தில் நடைபெறும். அதுபொது, பல முக்கிய பொருள்கள் குறித்து ஆலோசிக்கப்படும்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன். எம்.ஏ. அவர்களால அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன எம் ஏ